**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி**

**2024 ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 27–ஆம், நாள் செவ்வாய்க்கிழமை**
CNR No.TNTI12-000092-2012

**இடைநிலை மனு எண்.636/2023**
**இன்**
**அசல் வழக்கு எண்.641/2012**

பவித்ரா

...மனுதாரர்/ வாதி

**.. எதிர் ..**

1.வேலுச்சாமி
2.சுப்பிரமணியன்
3.முருகசாமி
4.ராதிகா
5.சிவகாமி
6.நிவேதா
7.ராமசாமி
8.சம்பத்
9.கலாமணி

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

10.ராஜசேகர்
11.துரைசாமி
12.விஜயலட்சுமி

...10 முதல் 12 எதிர்மனுதாரர்கள்/எதிர்நோக்கும் பிரதிவாதிகள்

13. ஆர்.கோவிந்தசாமி
14.பி.கருப்பசாமி
15.ஆர்.கருப்புசாமி

16.வெங்கடாசலபதி
17.ஏ.வேலுச்சாமி (இறப்பு)
18.சார்பதிவாளர், அவிநாசி
19.சாந்தி
20.கோகிலவாணி

...13 முதல் 20 எதிர்மனுதாரர்கள்/எதிர்நோக்கும் பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 09.11.2023 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், 13, 14 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி கலைச்செல்வி அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினராக உத்தரவிடப்பட்டும், 15, 16 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.குணசேகரன் அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினராக உத்தரவிடப்பட்டும், 18, 19 ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகததால் தோன்றாத்தரப்பினராக உத்தரவிடப்பட்டும், 20 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.டி.விஜயகுமார் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவு

13 முதல் 20 வரையிலான எதிர்நோக்கும் எதிர்மனுதாரர்களை அசல் வழக்கு எண்.641/2012 ல் தரப்பினர்களாக சேர்க்க அனுமதி வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10–ன்படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u>:–**

2.1) அசல் வழக்கில் மனுதாரர் வாதி என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாகப் பாகப்பிரிவினை மற்றும் பிற பரிகாரங்கள் கோரி வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி தாவாவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை இந்த பிரமாணப்பத்திரத்தின் ஒரு பகுதியாக கருத வேண்டும் என்றும், மேலும் மனுதாரர் சென்னையில் மனித நேய இலவச IAS அகாடமியில் இணைந்து IAS தேர்விற்கு படித்துக் கொண்ருந்ததாகவும், மனுதாரரின் குடும்ப சூழ்நிலை காரணமாக படிப்பைத் தொடர முடியவில்லை என்றும், மேற்படி அகாடமியில் துவக்கநிலை தேர்விற்காக மனுதாரருக்கு அடையாள எண் வழங்கப்பட்டதாகவும், அடையாள எண்.11213796767 என்றும், கடந்த 09.06.2016 ல் மனுதாரருக்கு திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்திற்குப் பிறகு மனுதாரர் கணவர் வீட்டில் வசித்து வந்ததாகவும், மேற்கண்ட சூழ்நிலையில் 1ம் எதிர்மனுதாரரின் சகோதரி திருமதி.சரோஜினி திருப்பூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஒரு அசல் வழக்கினை தாக்கல் செய்ததாகவும், அசல் வழக்கு O.S.NO.103/2012 ஆக

கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கில் அழைப்பாணை அனுப்பப்பட்டபொழுது வழக்கில் குறிப்பிடப்பட்ட விலாசத்தில் தற்காலிகமாக வசிக்கவில்லை என்றும், மனுதாரரின் திருமணம் விலாசம், கணவர் வீடு என விலாசங்கள் மாறி மாறி இருந்ததாக கூறப்பட்டுள்ளது.

2.2) மனுதாரருக்கு வழக்கு நடைமுறைகள் குறித்து தெரிய வருவதற்கு கால தாமதம் ஆகிவிட்ட காரணத்தினால் திருத்த விபரங்களில் சொல்லப்பட்ட சங்கதிகளை இவ்வழக்கின் வழக்குரையில் சேர்க்க முடியாமல் போய் விட்டதாகவும், வழக்குரையில் உரிய திருத்தங்களை செய்யும் பொருட்டு தனியாக உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 ன்கீழ் ஒரு மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி அசல் வழக்குகள் நிலுவையில் உள்ள போது பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றதாகவும், அவை அனைத்தும் இவ்வழக்கிற்கு அவசியமான சங்கதிகள் என்றும், 2 அசல் வழக்குகள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அசல் வழக்குகள் O.S.No.97/2019 & O.S.No.37/2022 என்றும், மேற்படி வழக்குகளும் இந்த அசல் வழக்கிற்கு தொடர்புடையது என்பதால் அவை தொடர்பாகவும் உள்ள சங்கதிகள் இவ்வழக்கில் சேர்க்கப்பட வேண்டும் என்றும், இந்த வழக்கில் தாவா சொத்துக்களில் சில பகுதி சொத்துக்களை, 1 ம் எதிர்மனுதாரர் வழக்கு நிலுவையில் இருந்தபோதே 10 முதல் 12 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு உண்மைத்தன்மையை மறைத்து கடந்த

09.12.2013 மற்றும் 27.01.2014 ஆகிய தேதிகளில் சட்ட விரோதமாக கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், அதன் பொருட்டு மேற்படி 10 முதல் 12 வரையான எதிர்மனுதாரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2)–ன்கீழ் 28.03.2019 ம் தேதியன்று ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2.3) மேலும் 2 முதல் 9 வரையான எதிர்மனுதாரர்களும் பல்வேறு தேதிகளில் சட்ட முரணான வகையில் வழக்கு சொத்தின் சில பகுதிகளை கிரையம் பெற்றதால் அவர்களையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டி ஏற்கனவே உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)–ன்கீழ் ஒரு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதகாவும், அம்மனு I.A.No.82/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 21.03.2019 ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி இடைநிலை மனு IA.No.522/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இரு தப்பு விசாரணைக்குப் பிறகு மேற்படி மனுவானது கடந்த 28.08.2022 ம் தேதியன்று நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதகாவும், பின்னிட்ட தேதிகளில் 13 முதல் 20 இலக்கமிட்ட எதிர்நோக்கும் எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கு நிலுவையில் இருக்கிறது என்று தெரிந்தும் சட்ட முரணான வகையில் வழக்குச் சொத்தின் சில பகுதிகளை கிரையம் பெற்றுள்ளதாகவும், 13 முதல் 20 வரையிலான எதிர்நோக்கும் எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க கோரி

இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அமைந்துள்ளது.

3) <u>20ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>

மனுவில் கண்டுள்ள சங்கதிகள் பொய்யானவை, தவறானவை என்றும், சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும், எதிர்மனுதாரர் ஏற்றுக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், வழக்கில் கூறப்படும் சொத்து 26.11.2020ம் தேதியன்று எம்.சாந்தி என்வரிடம் இருந்து ஆவண எண்.13035/2020 என்ற ஆவணமாக வாங்கப்பட்டதாகவும், சாந்தி இந்த வழக்கிற்கு சம்பந்தமான பிரதிவாதி இல்லை என்றும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனுவில் 19வது எதிர்மனுதாரர் என்றும், மனுதாரர் 20ம் எதிர்மனுதாரருக்கு அந்நியர் என்றும், 19ம் எதிர்மனுதாரர் 20ம் எதிர்மனுதாரருக்கு சொத்தை விற்றவர் என்றும், 1 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர் எனக்கு யார் என்று தெரியாது என்றும், 5மற்றும் 6ம் எதிர்மனுதார், 20ம் மனுதாரருக்கு எந்தவித உதவியும் செய்யவில்லை என்றும், சொத்தை வாங்கும்போது சொத்து சம்பந்தமான எந்தவித அறிவும் 20ம் மனுதாரருக்கு இல்லை என்றும், சொத்தின் மீது எந்தவித பிரச்சனை இல்லை என்று தெரிந்த பிறகு தான் சொத்தை 20ம் எதிர்மனுதாரர் வாங்கியதாகவும், சட்டவிரோதமாக இந்த மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றும், சொத்தை வாங்கும் போது வழக்கு நிலுவையில் இருப்பது 20ம் மனுதாரருக்கு தெரியாது

என்றும், இந்த மனுவை தள்ளுபடி செய்ய மனுதாரரால் வேண்டப்பட்டுள்ளது.

4) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டுள்ளது. இரு தரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு கோப்புகளை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

5) <u>இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:–</u>

5.1.) இம்மனுவின் தரப்பினர்களை அசல் வழக்கின் வரிசைக்கு இணங்க மனுதாரரை வாதி என்றும், 10 முதல் 20 வரையிலான எதிர்மனுதாரர்களை 10 முதல் 20 வரையிலான எதிர்நோக்கும் பிரதிவாதிகள் என்றும் குறித்து உரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது சுவாதீனம் பரிகாரம் கோரி வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.2.) மனு மற்றும் எதிருரையை கருத்தில் கொண்டு பரிசீலித்து ஆராய்கையில் கட்டளை 1 விதி 10–ன் வகைமுறையை இவ்விடத்தில் குறித்துரைக்கப்படவேண்டியது அவசியமாகும்.

Order 1 Rule 10 of CPC

10. Suit in name of wrong plaintiff.-

(1) Where a suit has been instituted in the name of the wrong person as plaintiff or where it is doubtful whether it has been instituted in the name of the right plaintiff, the court may at any stage of the suit, if satisfied that the Suit has been instituted through a bone fide mistake, and that it is necessary for the determination of the real matter in dispute so to do, order any other person to be substituted or added as plaintiff upon such

terms as the court thinks just.

(2) Court may strike out or add parties—

The court may at any stage of the proceedings, either upon or without the application of either party, and on such terms as may appear to the court to be just, order that the name of any party improperly joined, whether as plaintiff or defendant, be struck out, and that the name of any person who ought to have been joined, whether as plaintiff or defendant, or whose presence before the court may be necessary in order to enable the court effectually and completely to adjudicate upon and settle all the questions involved in the suit, be added.

(3) No person shall be added as a plaintiff suing without a next friend or as the next friend of a plaintiff under any disability without his consent.

(1) Where defendant added, plaint to be amended—

Where a defendant is added, the plaint shall, unless the court otherwise directs, be amended in such manner as may be necessary, and amended copies of the summons and of the plaint shall be served on the new defendant and, if the court thinks fit, on the original defendant.

(2) Subject to the provisions of the Indian Limitation Act, 1877 (15 of 1877), section 22, the proceedings as against any person added as defendant shall be deemed to have begun only on the service of the summons.

5.3.) மேற்கண்ட சட்டவகைமுறையை கவனமாக பரிசீலிக்கையில் கட்டளை 1 விதி 10(2)–ன்படி நீதிமன்றம் வழக்கின் எந்த கட்டத்திலும் வழக்கின் பிரச்சனையை முழுமையாக முடிவு காண அவசியமான தரப்பினர்களை வழக்கில்

கட்சி சேர்க்க உத்தரவிடலாம் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது. இந்த அசல் வழக்கில் 13 முதல் 20 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பினர்களாக சேர்ப்பதற்கு தாக்கல் செய்துள்ள இந்த மனுவிற்கு 20 வது எதிர்மனுதாரர் மட்டும் எதிருரை தாக்கல் செய்துள்ளார். எதிருரையில் கடந்த 26.11.2020 ம் தேதியில் ஒரு சாந்தி என்பவரிடம் இருந்து ஆவண எண்.13035/2020 மூலமாக தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளதாகவும், அந்த சாந்தி இந்த மனுவில் 19 வது உத்தேச தரப்பினராக உள்ளதாகவும், 20 வது எதிர்மனுதாரருக்கு இந்த அசல் வழக்கு நிலுவையில் இருப்பது குறித்து தெரியாது என்றும், ஆவணங்களை சரிபார்த்து கிரையம் பெற்றதாகவும், இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார். 20 வது எதிர்மனுதாரர் தாவா சொத்தினை கடந்த 26.11.2020 ம் தேதியில் 19 வது எதிர்மனுதாரர் இடமிருந்து கிரையம் பெற்று இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளார். இந்த அசல் வழக்கானது பாகபிரிவினை கோரி வாதியால் தொடரப்பட்டுள்ளது. பாகபிரிவினை வழக்கில் தரப்பினர்களின் உரிமைகளை முடிவு செய்யப்படவேண்டும். மேற்கண்ட சூழ்நிலையில் வழக்கு சொத்தின் தொடர்புடைய அனைத்து தரப்பினர்களையும் சேர்த்து வழக்கு விசாரணை செய்தால் தான் தரப்பினர்களுக்கிடையே உள்ள பிரச்சனைகளை தீர்வு காணவும் பல்வேறு வழக்கு நடவடிக்கைகளை தடுக்கவும் ஏதுவாக அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே வாதி தாக்கல்

செய்துள்ள இந்த மனுவை காலம் சென்ற 17 வது எதிர்மனுதாரருக்கு மற்ற தரப்பினர்களுக்கு எதிராக நீதியின் நலன் கருதி அனுமதிக்க உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** இந்த மனுவானது 17 வது எதிர்மனுதாரரை தவிர்த்து செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

Sd/-S.Vadivel
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**பிற்சேர்க்கை :-** இல்லை

Sd/-S.Vadivel
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**